**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ஏ.எண்.25/2026 அதன் இ.ஏ.எண்.23/2026**

**அதன் இ.பி.எண்.79/2021 அதன் அ.வ.எண்.67/1992**

1. ஜானகி ... 1 ம் மனுதாரர்/ 1 ம் மனுதாரர்/வாதி
2. தனபால் ... 2 ம் மனுதாரர்/2 ம் மனுதாரர்

–எதிர்–

ராஜா முத்தையா ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 02.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திரு.M.S.ஜவஹர்லால் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், இரு தரப்பு ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

நிறைவேறுதல் மனுவானது உரிமையியல் நடைமுறை விதிகள் 28(2)–ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் 1 ம் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், நிறைவேற்றுகை மனுவின் 1 ம் மனுதாரர் என்றும், நிறைவேறுதல் மனு பிறந்த உத்தரவின் படி, நீதிமன்ற அமீனா தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன்

அளந்து பார்த்ததில் கிழக்கு எல்கை நிறைவேறுதல் மனுவில் தவறுதலாக உள்ளதாக வாரண்டை நிறைவேற்றாமல் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்து விட்டார் என்றும், எனவே, பிராது தபசில் சொத்தின் கிழக்கு எல்கை 168/3 என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதை தவிர்த்து தபசில் சொத்து பிராதில் கண்டபடி 182/1ல் அமைந்துள்ளது என்றும், அதன் அளவுகள் சீராக உள்ளது என்பதையும், ஆக்கிரமிப்பு பகுதி கண்டறியப்பட்டுள்ளது என்பதையும் ஏற்று நீதிமன்ற அமீனாவிற்கு நிறைவேற்றுதல் மனுவில் பிறந்த உத்தரவுப்படி எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்த 2வது தபசில் சொத்தை இடித்து அகற்ற அமீனாவிற்கு வாரண்டை வழங்க தாக்கல் செய்த இ.ஏ.எண்.23/2026ல் எதிருரை தாக்கல் செய்ய 19.02.2026ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள மனு மற்றும் நிறைவேற்றுகை மனுவை முன் கூட்டியே எடுக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**

3.1) இ.ஏ.எண்.23/2026 ஆனது 19.02.2026ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் உரிய திருத்தம் மேற்கொள்ளாமல் தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்றும், நிறைவேற்றுகை மனுவை 19.02.2026ம் தேதியில் இருந்து உடனடியாக எடுக்க வேண்டுமென்று எந்தவிதமான அவசரமும் இல்லை என்றும், தபசில் சொத்து விபரத்தை திருத்தம் செய்யாமல் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் அடிப்படையில் இடிப்பதற்கு எந்தவிதமான பரிகாரமும் கோர முடியாது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் கோரியவாறு நிறைவேற்றுகை மனுவினை</u>**

**<u>முன்கூட்டியே எடுக்க (Advance Hearing) அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7). இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர்கள் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர் ஆவார். நிறைவேற்றுகை மனுவானது மனு தபசில் சொத்தைப் பொறுத்து சுவாதீனம் கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8). மனுதாரர் நிறைவேற்றுகை மனுவை 19.02.2026ம் தேதியிலிருந்து அதற்கு முன்பு எடுக்க வேண்டும் என்று உ.வி.மு விதிகள் பிரிவு 28(2) ன் கீழான மனு தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்றுகை மனுவானது 2021ம் ஆண்டிலிருந்து நிலுவையில் உள்ளது என்பதாலும், மேலும், அசல் வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வரை இரு தரப்பினர்களும் சென்று மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் இறுதி உத்தரவு அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இ.ஏ.எண்.23/2026 என்ற இடை மனுவில் எதிருரை தாக்கல் செய்வதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறைவேற்றுகை மனுவை இன்றைய தினம் கோப்புக்கு எடுப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு நீதியின் நலன் கருதியும், இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. இ.ஏ.எண்.23/2026 மனுவையும் மற்றும் நிறைவேற்றுகை மனுவையும் 19.02.2026ம் தேதியிலிருந்து இன்றைய தேதிக்கு கோப்புக்கு எடுக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**இறுதியில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

order uploded on 03.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.03 19:04:53 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை
2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை
3). எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை
4). எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploded on 03.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.03 19:05:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.ஏ.எண்.25/2026
இன்
இ.பி.எண்.79/2021
இன்
அ.வ.எண்.67/1992
வரைவு/நேரிய உத்தரவு
நாள் – 03.02.2026.